**दक्षिण रेलवे/Southern Railway**
**चेन्नै मंडल/Chennai Division**

No.PUB/MAS/2020/09/02 Date: 11.09.2020

**प्रेस विज्ञप्ति /PRESS RELEASE**

## TIME-TABLED CONTAINER TRAIN SERVICES INTRODUCED BY CHENNAI DIVISION GAINS PATRONAGE

Chennai Division of Southern Railway has introduced a new stream of traffic, "Time-tabled container train services" to capture the loading and unloading of goods from industries and firms to destinations across the country. Apart from Coal and Coke, other major commodities like Fertilizers, gypsum and limestone are being loaded in recent times.

The sustained effort of Chennai Division's Business Development Unit is yielding positive results. Significantly, the time-tabled container train services that were introduced on 20.08.2020 for the first time in the division was operated between Chennai Harbour and Whitefield (near Bengaluru). This new stream of service functions as daily services between the stations. Each way trip fetches revenue of Rs.4.3 lakhs to Railways.

Chennai Division loaded its first rake with Muriate of Potash(MOP) of M/s Indian Potash Limited to Gudivada in Andhra Pradesh. The rake left Chennai Harbour on 07.09.2020 with 1338 tonnes of MOP generating revenue of Rs. 9.57 lakhs for Railways. Till date, a total of 2667 tonnes of the consignment has been loaded fetching revenue of Rs.20 lakhs.

Loading from kamarajar port (Chennai) to South Central Railway has picked up as customers availed the benefit of automatic freight rebate scheme, providing incentives to customers to carry load in the traditional empty flow direction. Chettinad International Bulk Private Limited has loaded 10 rakes of gypsum to Vijayawada and Renigunta divisions of SouthCentral Railway in the last 3 months and promised more rakes in the future benefitting from the scheme. This has increased the Chennai division's loading by around 40,000 tonnes and this has earned additional revenue of around 4.12 crores.

Another major commodity that witnessed an upswing in loading is Limestone. During the financial year 2019-20, 55 rakes with 2,20,061 tonnes was loaded and fetched Rs.19 crore revenue till August 2019. In this financial year 2020-21, 128 rakes with 4,97,876 tonnes has been loaded and has earned Rs. 38 crore as revenue till 25.08.2020. This is a 126% increase in tonnage over same period of previous year and also surpasses the entire previous year revenue of Rs. 31 crores from loading of limestone.

Chennai Division reiterates its commitment to serve freight customers. Customers may access Helpline 139 for any queries/suggestions/complaints on freight and Parcel traffic.

**-Sd-**

**ए .एलुमलै /** (A.Elumalai)

**जनसंपर्क अधिकारी /** Public Relations Officer

**चेन्नै मंडल**/ Chennai Division

**Follow us**

https://sr.indianrailways.gov.in/index.jsp

**https://twitter.com/DrmChennai**

**சென்னை கோட்டம்**
**தெற்கு ரயில்வே**

No PUB/MAS/2020/09/02 நாள்: 11.09.2020

## <u>செய்தி வெளியீடு</u>

**சென்னை ரயில்வே கோட்டம் அட்டவணையிட்ட கன்டெய்னர் ரயில் சேவைகள் மூலமாக சரக்கு ரயில் போக்குவரத்தில் வருவாய் அதிகரிப்பு**

தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம் அட்டவணையிட்ட கன்டெய்னர் ரயில் சேவைகள் மூலமாக தொழிற்சாலைகள் மற்றும் உற்பத்தி நிலையங்களிலிருந்து நாட்டின் பல்வேறு இடங்களுக்கு சரக்கு ஏற்றிச் செல்வதில் பெரும் வர்த்தகத்தை ஈர்த்துள்ளது. நிலக்கரி தவிர்த்து சமீப காலங்களில் உரம், ஜிப்சம் மற்றும் சுன்னாம்பு கல் ஆகியவை பெருமளவில் சரக்கு ரயில்கள் மூலமாக கொண்டு செல்லப்படுகிறது.

சரக்கு போக்குவரத்து மேம்பாட்டு குழுவின் பெரும்முயற்சியின் காரணமாக, சென்னை ரயில்வே கோட்டம் அட்டவணையிட்ட கன்டெய்னர் ரயில் சேவையை 20.08.2020 அன்று தொடங்கியது. இந்த புதுவகை சரக்கு ரயில் போக்குவரத்து சென்னை துறைமுகத்தில் இருந்து பெங்களூரு அருகேயுள்ள ஒயிட்பீல்டு வரை இயக்கப்பட்டது. இந்த ரயில் சேவை தினசரி ரயில் சேவையாக இயக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு டிரிப்புக்கும் கட்டணத்தொகையாக 4.3 லட்சம் ரூபாய் ரயில்வேக்கு வருவாயாக கிடைத்து வருகிறது.

சென்னை ரயில்வே கோட்டம் இந்திய பொட்டாஷ் லிமிடெட் நிறுவனத்தினுடனான வர்த்தகத்தை ஈர்த்துள்ளது. இந்நிறுவனத்தின் "மியூரேட் ஆ◌ஃப் பொட்டாஷ்" என்கிற உரம் சார்ந்த பொருட்களை சென்னை துறைமுகத்திலிருந்து ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் உள்ள குட்டிவாடா என்கிற இடத்திற்கு ஏற்றிச் செல்லப்பட்டது. இந்த முதல் சரக்கு ரயில் செப்டம்பர் 7, 2020 அன்று 1,338 டன்கள் அளவிலான உரப்பொருட்களை ஏற்றிச் சென்றதன் விளைவாக ரூபாய் 9.57 லட்சம் வருவாயாக ரயில்வே ஈட்டியுள்ளது. தற்போது வரை சுமார் 2,667 டன்கள் ஏற்றிச் சென்றதன் விளைவாக ரூபாய் 20 லட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

சரக்கு போக்குவரத்து மேம்பாட்டு குழு அறிமுகப்படுத்தியுள்ள சலுகை திட்டங்கள் காரணமாக செட்டிநாடு நிறுவனம் கடந்த 3 மாதங்களில் மட்டும் 10 ரயில்களில் 'ஜிப்சம்' என்ற தாதுப்பொருள், எண்ணூரில் அமைந்துள்ள காமராஜர் துறைமுகத்திலிருந்து விஜயவாடா மற்றும் ரேணிகுண்டா ஆகிய ரயில் கோட்டங்களுக்கு ஏற்றிச் செல்லப்பட்டுள்ளது. மேலும் ரயில்வேயுடன் இணைந்து அதிக அளவில் வர்த்தகம் செய்ய செட்டிநாடு நிறுவனம் இசைவு தெரிவித்துள்ளது. இவ்வகை சரக்கு போக்குவரத்தினால் 40,000 டன் பொருட்கள் ஏற்றிச் சென்றதன் மூலம் சுமார் 4.12 கோடி ரூபாய் வருவாயாக சென்னை ரயில்வே கோட்டம் எட்டியுள்ளது.

சுண்ணாம்பு கல் சரக்கு போக்குவரத்தில் குறிப்பிடத்தக்க உயர்வை அடைந்துள்ளது. கடந்த 2019-20 நிதியாண்டில் ஆகஸ்ட் மாதம் வரையிலான காலகட்டத்தில் 55 சரக்கு ரயில்களை இயக்கி 2,20,061 டன்கள் ஏற்றிச் சென்றதன் மூலம் 19 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டது. ஆனால் இந்த 2020-21 நிதியாண்டில் ஆகஸ்ட் மாதம் வரையிலான காலகட்டத்தில் 128 சரக்கு ரயில்களை இயக்கி 4,97,876 டன்கள் ஏற்றிச் சென்றதன் மூலமாக கிடைக்கப்பெற்ற வருவாய் 38 கோடி ரூபாய் ஆகும். இதன்மூலம் சரக்கு போக்குவரத்து 126% உயர்வு அடைந்துள்ளது. அதுமட்டுமல்லாமல் கடந்த நிதியாண்டில் ஈட்டப்பட்ட மொத்த வருவாயான ரூபாய் 31 கோடியை கடந்து சுண்ணாம்பு கல் சரக்கு போக்குவரத்தில் சென்னை ரயில்வே கோட்டம் சாதனை படைத்துள்ளது.

சென்னை ரயில்வே கோட்டம் தனது வாடிக்கையாளர்களுக்கு தன்னிகரில்லா சேவையை தொடர்ந்து அளித்து வருகின்றது. சரக்கு மற்றும் பார்சல் சேவைகள் குறித்த சந்தேகங்கள்/ விசாரணை மற்றும் ஆலோசனைகளுக்கு 139 என்ற உதவி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

**-Sd-**

அ. ஏழுமலை
மக்கள் தொடர்பு அதிகாரி
சென்னை கோட்டம்